# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

# 3rd Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| நாடகமும் அரங்கியலும் Drama & Theater | Three Hours / Gr -12 (2022) | 58 | T | I,II |

## பகுதி I

❖ **இப்பகுதியின் எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

❖ ***1 – 40* வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடைகளைத் தெரிவு செய்க.**

01. ''நாடகம் என்பது வாழ்க்கையின் ஒரு துண்டம்'' என்ற கருத்தைக் கூறியவர்.
1) இளம்பூரணனார் 2) பேர்ணாட்ஷா 3) அரிஸ்ரோட்டில்
4) தொம்சன் 5) அலடைஸ் நிக்கொல் ( )

02. தொழிநுட்ப சாதனப் பயன்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கும் கலை வடிவம்.
1) நாடகம் 2) நடனம் 3) இசை 4) சிற்பம் 5) சினிமா ( )

03. யாதார்த்த வாத நாடகமோடியின் முன்னோடியாகக் கருதப்படுபவர்
1) அன்ரன் செக்கோவ் 2) ஹென்றிக் இப்சன் 3) அலெக்சாண்டர் டூமா
4) ஹென்றி பெக் 5) எமிலிசோலா ( )

04. சாத்வீக அபிநயத்தில் வரும் பிரளய என்பதன் பொருள்
1) உடலின் நிறம் மாறுதல் 2) உடல் நடுங்குதல் 3) குரல் மாற்றம்
4) வியர்த்தல் 5) மயக்கம் ( )

05. பார்ஷிய வழி இசை நாடகம் சிங்கள மக்கள் மத்தியில் பின்வருமாறு அழைக்கப்படுகின்றது
1) கோலம் 2) சொக்கரி 3) ஒப்பேரா 4) நூர்த்தி 5) நாடகம் ( )

06. மரபுவழிக் கூத்தில் ''சட்டம் கொடுத்தல்'' என்பது.
1) பாத்திரத் தெரிவு 2) ஒத்திகை பார்த்தல் 3) சலங்கை அணிதல்
4) அளிக்கை செய்தல் 5) வெள்ளுடுப்பு ஒத்திகை ( )

07. நாடக ஆற்றுகை ஒன்றின் முதன்மையான மூலகம்
1) நடிகன் 2) பார்ப்போன் 3) தயாரிப்பாளன்
4) நெறியாளன் 5) காட்சி அமைப்பாளர் ( )

08. வாசிப்பின் மூலம் நுகரப்படும் கலைவடிவம்
1) தொலைக்காட்சி நாடகம் 2) வானொலி நாடகம் 3) சிறுகதை
4) நாடகம் 5) இசை ( )

09. "ஆகைக் கண்டுபிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவதும் கலை" எனக் குறிப்பிட்டவர்.

1) மா சேதுங் 2) அரவிந்தர் 3) இரமதாஸ் முகர்ஜி
4) ரவீந்திரநாத் தாகடர் 5) சலாயோகி ஆனந்தகுமாரசாமி ( )

10. படச்சட்ட மேடையின் பின்புறத்தே காணப்படும் திரை

1) வான்திரை 2) முன்திரை 3) பக்கத்திரை
4) குறுக்குத்திரை 5) மேற்திரை ( )

11. இயற் பண்பு வாதத்தின் தந்தை எனப்படுபவர்

1) எமிலி சோலா 2) ஹென்றிக் இப்சன் 3) ஹென்றி பெக்
4) அலெக்சாண்டர் 5) அன்ரோ அன்ரோயின் ( )

12. சமஸ்கிருத அரங்கின் கதைப்பின்னலில் தனக்குப் பயன் ஏதுமின்றி தலைவனின் விருப்பத்துக்காகப் பாடுபடுவதாகக் கற்பனை செய்யப்படும் வரலாறு.

1) பிஜ 2) கார்ய 3) பிந்து 4) பாதக 5) பிரகரி ( )

13. பின்வரும் பண்புகளைக் கொண்ட நடாடக மரபு

- கொட்டகை மரபுகள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- கர்நாடக இசையைக் கொண்டது.
- பாடலை அரங்காகக் கொண்டது.
- ஊட்டு வசனங்களைக் கொண்டது.

1) தெருக்கூத்து 2) பள்ளு 3) கீர்த்தனை
4) ஸ்பெசல் நாடகம் 5) ரசலீலா ( )

14. பின்வரும் கூற்றுக்களில் கூத்தின் அழகியலைப் பிரதிபலிக்காத அம்சம்

1) கூத்தர்கள் நிலபாவாடை விரித்து வரவேற்கப் பெறல்.
2) அண்ணாவியார் சால்வை அணிவித்துக் கௌரவிக்கப்பெறல்.
3) வட்டக்களரியில் பாரம்பரிய ஒளியூட்டல்.
4) பலஊர்களிலிருந்தும் பார்ப்போர் ஆற்றுகையைப் பார்க்க வருதல்.
5) தனித்துவமான வேட உடை. ( )

15. முதன் முதலில் வேடமுகத்தைப் பயன்படுத்திய அரங்க மரபு

1) சமஸ்கிருத அரங்கு 2) எலிசபெத்கால அரங்கு 3) ஜப்பானிய அரங்கு
4) கிரேக்க அரங்கு 5) சீன அரங்கு ( )

16. ஆற்றுகைக்கலைகளை மட்டும் கொண்ட தொகுதியாக கருதக்கூடியது

1) சிற்பம், நாடகம் 2) மேஹா, இலக்கியம் 3) நாடகம், ஓவியம்
4) பலே, ஒபேஹா 5) நாடகம், சித்திரம் ( )

17. நாடகம் ஒரு செயலை, உலக நடைமுறைகளைப் போலச் செய்தலாகும் என்ற கருத்துக்களை முன்வைத்தவர்கள்

1) அரிஸ்ரோட்டில், போனாட்ஷா 2) பரதர், அல்டைஸ் நிக்கோல்
3) போனாட்ஷா, நிக்கோல் 4) மௌன குரு, பரதர்
5) பரதர், அரிஸ்ரோட்டில் ( )

18. அரங்கில் ஒளியின் செறிவைக் கூட்டிக்குறைக்கப் பயன்படுத்தும் கருவி
1) பரப்பொளி 2) பொட்டொளி 3) மங்கலாக்கி
4) கீற்றொளி 5) வர்ணச்சக்கரம் ( )

19. மனோரதிய வாத நாடக மோடியின் பண்பு அல்லாதது
1) கற்பனைக்கு முக்கியத்துவம் அளிப்பது.
2) காரணகாரியத் தொடர்புக்கு முதன்மை வழங்குவது.
3) இயற்கையின் அழகு, காதலின் சிறப்புப் பற்றிக் கூறுவது.
4) அறிவாற்றிலும் பார்க்க உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பது.
5) நல்லது – கொட்டது, கறுப்பு – வெள்ளை போன்ற பாத்திரச் சித்தரிப்புக்களைக் குறிப்பது. ( )

20. கதாநாயகனின் எதிர் பார்ப்புக்கள் நிறைவேறுமா? இல்லையா எனும் ஆவல் மேலிடுகின்ற அந்தர நிலையைக் குறிக்கும் கதைப்பின்னலின் சந்தர்ப்பமாக அமைவது.
1) ஆரம்ப 2) நியதாப்தி 3) பலாகம்
4) பிராப்தியாய 5) பிரயத்தன ( )

21. நடிகமணி வைரமுத்துவின் பிரதான ஆற்றல் எது எனக் கருதப்படுவது
1) பாடும் திறன் 2) வேடப்பொருத்தம்
3) சிறந்த உடல் வெளிப்பாடு 4) வேட உடை, ஒப்பனை, வெளிப்பாடு
5) பாவபூர்வமான பாடலும் நடிப்பும் ( )

22. இராவணேசன் நாடகத்தில் "செஞ்சோற்று கடனுக்காக" உயிர்துறத்த பாத்திரம்
1) இந்திரஜித் 2) கும்பகர்ணன் 3) குருதிக்கண்ணன்
4) விபிஷனன் 5) மண்டோதரி ( )

23. வேட உடை, ஒப்பனை என்பவற்றுடன் தொடர்புடைய அபிநயம்
1) சாத்வீகம் 2) ஆஹார்யம் 3) வாச்சீகம்
4) ஆங்கீகம் 5) பிந்து ( )

24. பின்வருவனவற்றில் 'மன வெளியில் கண்டு' கற்பனை செய்து இரசிக்கும் கலை வடிவம்
1) நடனம் 2) இலக்கியம் 3) இசை 4) நாடகம் 5) சினிமா ( )

25. "சுவைபட வந்தனவெல்லாம் ஓரிடத்தே வந்தனவாக தொகுத்து கூறுதல் - நாடக வழக்கு' என கூறியவர்
1) இளம் பூரணார் 2) பரதர் 3) அபிநவகுப்தர்
4) சுவாமி விபுலானந்தர் 5) பரிதிமாற் கலைஞர் ( )

26. நாடகத்தில் காட்சி விதானிப்பு செய்யப்படுவதன் நோக்கம் அல்லாதது.
1) நாடகத்தை அழகியல் தன்மையுடையதாக்கல்.
2) நாடகத்தின் கதை, களம் என்பவற்றைப் பிரதிபலித்தல்.
3) கரு, மனநிலை, மோடி, என்பவற்றை வெளிப்படுத்தல்.
4) பாத்திர அசைவியக்கத்தை ஒழுங்குபடுத்தல்.
5) பாத்திரத்தின் பௌதிகப் பண்பை வெளிப்படுத்தல். ( )

27. ‘‘றிச்சாட் செக்னர்’’ தனது ‘‘சூழலியல் அரங்க’’ உருவாக்கத்திற்கு மூலமாகப் பயன்படுத்தியது

1) ஜப்பானிய நோ　　2) ராம்லீலா　　3) தெருக்கூத்து
4) ஒப்பேரா　　5) நாட்டுக்கூத்து　　(　　)

28. லோகதர்மி, நாட்டியதர்மி எனும் அவைக்காற்றுகைப் பாணிகளை முதலில் குறிப்பிடும் நூல்

1) தசரூபகம்　　2) சிலப்பதிகாரம்　　3) கவிதையியல்
4) நாட்டிய சாஸ்திரம்　　5 தொல்காப்பியம்　　(　　)

29. கிருஷ்ணாழ்வாருக்கு பெயரீட்டிக் கொடுத்த பாத்திரம்

1) சுபத்திரை　　2) அனுமன்　　3) அல்லி　　4) பவளக்கொடி　　5) பவூன்　　(　　)

30. ‘‘அப்பனைக் கொன்றவனோடு எப்படி நீ கூடினாயே தம்பி அடதம்பி……..’’ மேற்குறித்த பாடலடியில் ‘‘அப்பன்’’ எனக் குறிப்பிடப்படும் பாத்திரம்

1) தசதரன்　　2) அனுமன்　　3) வாலி
4) இராமன்　　5) சுக்கிரீவன்　　(　　)

31. யாதார்த்த நாடக மோடியின் ஒப்பனை பெரும்பாலும்

1) மிகைப்படுத்தப்பட்டதாய் இருக்கும்.
2) குறியீட்டுப் பாங்கானதாயிருக்கும்.
3) இயல்பு நிலையானதாய் இருக்கும்.
4) பகட்டு, ஆடம்பரம் மிக்கதாய் அமையும்.
5) மோடிமைப் பண்பு கொண்டதாய் இருக்கும்.　　(　　)

32. நவவேடகைவாத அரங்கின் தந்தையாகக் கருதப்படுபவர்

1) யூஜினோ பாபா　　2) அன்ரனின் ஆட்டுவோட்　　3) ஒகஸ்தாபோல்
4) பாதல் சர்க்கார்　　5) ஹென்றிக் இப்சன்　　(　　)


33. ‘ஆற்றுகை’ என்பதன் அடிப்படை அர்த்தம்

1) ஒருவர் / பலர் முன்பாக செய்து காட்டுவது.
2) கலையாகப்படைத்தல்.
3) பலரை ஒன்று சேர்ப்பது.
4) ‘அழகை’ வெளிப்படுத்துவது.
5) ‘கதை’ ஒன்றை வெளிப்படுத்துவது.　　(　　)

34. மோடிமைப்பானி நாடக மரபில் வேட உடையின் இயல்பு அல்லாதது

1) பகட்டு, ஆடம்பரம் நிறைந்தது.
2) முத்துக்கள், மணிகள் பதிக்கப்பட்டது.
3) குறியீட்டுப் பாங்கானது.
4) வாழ்வை மிக ஒத்ததாகக் காணப்படும்.
5) பாத்திரங்கள் யாவும் ஒரே தன்மையான உடையை அணியும்.　　(　　)

35. படத்தில் காட்டப்பெற்றுள்ள அரங்கவியலாளரினால் தோற்றுவிக்கப்பெற்ற அரங்க வகை



1) காவிய அரங்கு
2) வறுமை அரங்கு
3) சூழலியல் அரங்கு
4) குரூர அரங்கு
5) தளைநீக்க அரங்கு

( )

36. நாட்டிய சாஸ்திர அரங்கில் குறிப்பிடப்படும் விக்கிரஸ்ர என்பது
1) வட்ட அரங்கு
2) முக்கோண அரங்கு
3) செவ்வக அரங்கு
4) துருத்த அரங்கு
5) சதுர அரங்கு ( )

37. இப்பாடத்தில் உள்ள நாடக ஆசிரியர் பிரபல்யம் பெற்றிருந்த நாடக வகை



1) கூத்துக்கள்
2) இசை நாடகம்
3) பா நாடகம்
4) சிறுவர் நாடகம்
5) நடன நாடகம்

( )

38. இராவணேசன் நாடகத்தில் 'மோதுகை அரம்பிப்பது'
1) இராம் - இராவண உரையாடலில்.
2) அங்கதன் - இராவணன் சந்திப்பில்.
3) இந்திரஜித் - இலக்குவன் போரில்.
4) மண்டோதரி - இராவணன் சந்திப்பில்.
5) இராவணன் தோற்றுவரும் போது.

( )

39. ஒளி அமைப்பின் வர்ணச்சக்கரம் ஒன்றின் மூல வர்ணங்கள்
1) சிவப்பு, நீலம், பச்சை 2) மஞ்சள், நீலம், ஊதா 3) சிவப்பு, நீலம், மஞ்சள்
4) மஞ்சள், நீலம், செம்மஞ்சள் 5) மஞ்சள், ஊதா, பச்சை ( )

40. நாடக ஆரியரின் உணர்வினைப் பார்ப்போருடன் தொடர்புபடுத்துவதில் பிரதானமானவர்
1) நெறியாளர் 2) தயாரிப்பாளர் 3) நடிகர்
4) இசையமைப்பாளர் 5) ஒளி விதானிப்பாளர் ( )

## பகுதி II

❖ **பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களும் பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக?**

## பகுதி A

*01. 1)* 'கலை' 'கைவினை' இரண்டிற்குமான வேறுபாட்டை விளக்குக. *(5 புள்ளிகள்)*

*2)* ஆற்றுகைக் கலையின் பிரதான பண்புகள் நான்கைக் கூறி விளக்குக. *(5 புள்ளிகள்)*

*3)* நாடகம் ஏனைய கலைகளான தொலைக்காட்சி, வனொலி நாடகம் என்பவற்றிலிருந்து வேறுபடுமாற்றை விளக்குக. *(5 புள்ளிகள்)*

*02. 1)* அரிஸ்ரோட்டிலால் குறிப்பிடப்பட்ட திறஜெடியின் ஆக்கக் கூறுகளைக் குறிப்பிட்டு விளக்குக. *(6 புள்ளிகள்)*

*2)* 'சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்தில் நெறிமுறைப்படுத்தப்பட்ட அரங்க மரபு ஒன்று தமிழ் நாட்டில் இருந்துள்ளது இக்கூற்றினை உதாரணங்களுடன் விளக்குக. *(9 புள்ளிகள்)*

*03.* பின்வருவனவற்றுள் மூன்றிற்கு சிறுகுறிப்பு தருக.

*1)* இயற்பண்பு நாடக மோடி

*2)* கற்பித மனோரதிய நாடக மோடி

*3)* மிகைப்பாட்டு நாடக மோடி

*4)* யதார்த்த விரோத மோடி

*5)* கூத்து மோடி

*(3x5=15 புள்ளிகள்)*

## பகுதி B

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

*04. 1)* நாட்டிய சாஸ்திரம் கூறும் இரு வகையான தர்மிகளும் எவை? *(2 புள்ளிகள்)*

*2)* நிருத்த, நிருத்திய, நாட்டிய என்பன பற்றி விளக்குக. *(6 புள்ளிகள்)*

*3)* மார்க்க, தேசி அரங்க மரபுகளுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிட்டு விளக்குக. *(7 புள்ளிகள்)*

*05. 1)* 'இராவணேசன்' நாடகத்தின் கரு, மோடி, பாத்திரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக. *(3 புள்ளிகள்)*

*2)* மரபு வழிக்கூத்தில் அண்ணாவியாரின் பங்களிப்பு யாது? *(5 புள்ளிகள்)*

*3)* இராவணேசன் நாடகத்தின் தேசி மரபுகளை இணங்கண்டு விளக்குக. *(7 புள்ளிகள்)*

*06.* பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

*1)* காட்சியமைப்பு

*2)* பலே

*3)* கதாசீஸ்

*4)* மாதவியின் பதினொரு ஆடல்கள்

*5)* இசைநாடகம்

*(3x5=15 புள்ளிகள்)*